செ.வெ.எண்: 11/2021 நாள்: 04.08.2021

# செய்தி வெளியீடு

## "வேளாண் உட்கட்டமைப்புநிதி" என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டு, வட்டியில் 3 சதவிகிதம் சலுகையும் வழங்கப்படுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

விவசாயிகள் வேளாண் விளைபொருள்களைஉற்பத்திசெய்பவர்களாகமட்டும் இருந்து விடாமல் தங்கள் விளைபொருளை சந்தைப்படுத்தும் திறனை ஏற்படுத்த ஏதுவாக வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் இதற்குத் தேவையானகட்டுமானவசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும்,விவசாயிகள்,உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் (Start Up) என்றுஅழைக்கப்படும் வேளாண் துவக்க நிதி நிறுவனங்கள் அவரவருக்குத் தேவையான கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி கொள்ள ஏதுவாக "வேளாண் உட்கட்டமைப்புநிதி" என்ற ஒன்றியஅரசின் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டு,வட்டியில் 3 சதவிகிதம் சலுகையும் வழங்கப்படுகிறது.

உதாரணமாக ஒரு விவசாயி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறுவாராயின் அக்கடனுக்கு விதிக்கப்படும் மொத்த வட்டி விகிதம் 4 சதவிகிதமாகும். இத்திட்டத்தின் கீழ் 3 சதவிகிதம் வட்டியில் விலக்கு அளிக்கப்படுவதால் நிகரவட்டி விகிதம் ஒருசதவிகிதமாகும். எனவே,விவசாயிகள்,உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்,வேளாண் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் (Start Up) என்று அழைக்கப்படும் வேளாண் துவக்க நிதி நிறுவனங்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் கீழ்காணும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்ட வரையறைக்குள் **ஒருவிரிவானதிட்டஅறிக்கையினை**(DPR) தயாரித்திட வேண்டும். இதற்கான மாதிரி விரிவான திட்ட அறிக்கை இணையதளத்தில் உள்ளது (agriinfra.dac.gov.in). இதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- மின்னணு சந்தைப்படுத்தும் தளங்கள் உள்ளிட்ட தொடர் சங்கிலி சேவைகளை வழங்குதல்
- சேமிப்பு கிடங்குகள்
- சேமிப்பு குதிர்
- சிப்பம் கட்டும் அறைகள்
- மதிப்பீட்டுஅலகுகள்
- தரம் பிரிக்கும் அலகுகள்
- குளிர்பதனசங்கிலிகள்
- தளவாட வசதிகள்
- முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்
- பழுக்கவைக்கும் கூடங்கள்
- முந்திரி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம் போன்ற முதன்மை பதப்படுத்துதல் வரையிலான வசதிகளுக்கு கடனுதவி பெறலாம்.

மேலும் இந்த இணையதளத்தில் பயனாளியாகவும் பதிவு செய்து கொண்டு விரிவான திட்ட அறிக்கையினை இணையதளத்தின் மூலமாகவும் பதிவேற்றலாம்.

இத்திட்டத்தின் பதிவுசெய்து பயன் பெற விரிவான திட்ட அறிக்கையுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் விவரம் கீழ்காணுமாறு

1. விண்ணப்பக் கடிதம்/வங்கியின் கடன் விண்ணப்பபடிவம்.

2. விண்ணப்பதாரரின் புகைப்படம் -(Passport Size)
3. ஆடையாளஆதாரம் - (Voter ID card/Pass port/ Aadhar Card/ Driving License)
4. முகவரிக்கானஆதாரம் - (Voter ID card/Pass port/ Aadhar Card/ Driving License/Electricity Bill)
5. விண்ணப்பிப்பது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எனில் பதிவு செய்ததற்கானஆதாரம்
6. கடந்த மூன்று வருடங்களுக்கான வருமானவரி கணக்கை தாக்கல் செய்த விவரம்
7. வரவு-செலவு திட்ட அறிக்கை
8. நிழல உரிமைக்கான ஆவணங்கள்
9. கடந்த ஒருவருடத்திற்கான வங்கிக் கணக்கு பரிவர்த்தனை நகல்
10. திட்ட கட்டுமானத்திற்கான தளவமைப்பு, மதிப்பீடு மற்றும் அரசின் ஒப்புதல்

மேலும் விவரங்களுக்கு கோயம்புத்தூர்(Mobile number - 9865678453, email id - ddab.coimbatore2@gmail.com)மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

**வேளாண்மைவிற்பனைமற்றும் வேளாண் வணிகத் துறை**

**திருப்பூர்மாவட்டம்**

மாவட்டஆட்சித் தலைவர்அவர்களுக்குபணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.கு.எண்: இ/247/2021**

பொருள்**: வேளாண்மைஉட்கட்டமைப்புநிதி**(Agriculture Infrastructure Fund)-
செய்திவெளியீடுதொடர்பாக